DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai
**CC. No. 119/2025**
**Deposition of LW1 examined as PW1** Dt. 07.07.2025

| | |
|---|---|
| Name | ஞானசேகரன் HC |
| Father's/Husband's Name | அரங்கராஜன் |
| Village | தென்காசி– குடிமை பொருள் குற்றப்புலனாய்வு பிரிவு |
| Taluk | |
| Age | 45/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 07.07.2025

(A1,A2 present)

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து தென்காசி–குடிமை பொருள் குற்றப்புலனாய்வு பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.10. 2023ம் தேதி குடிமை பொருள் குற்றப்புலனாய்வு பிரிவு காவல் ஆய்வாளர் ரமேஷ்கண்ணன், முதல் நிலை காவலர் பாலமுருகன் மற்றும் நானும் சேர்ந்து ரோந்து பணியில் இருந்த போது ஆய்வாளர் ரமேஷ்கண்ணன் என்பவருக்கு தொலைபேசியில் ரகசிய தகவளாளி மூலம் தகவல் வந்தது. அதில் பூம்புகார் மெயின்ரோட்டில் புஞ்சை என்ற கிராமத்தில் SR பெட்ரோல் பங்கில் TN 51 AZ3935 என்ற பதிவெண் கொண்ட TATA ACE வாகனம் நின்று கொண்டிருப்பதாகவும் அதில் பொதுமக்களுக்கு விநியோகம் ரேசன் அரிசி மூட்டை மூட்டையாக வைத்திருப்பதாக தகவல் வந்தது. 19.00 மணிக்கு நானும், ஆய்வாளரும் மற்றும் கிரேடு–1 பாலமுருகனும் சேர்ந்து சென்று பார்த்த போது மேற்படி TATA ACE வாகனம் நின்று கொண்டிருந்தது. அதன் அருகில் எதிரி பிரசாந்த் என்பவர் நின்று கொண்டிருந்தார். எங்களை பார்த்ததும் தப்பி செல்ல இருந்த நபரை பிடித்து விசாரணை செய்த போது ரேசன் அரிசியை எங்கிருந்து வாங்கினீர்கள் என்று கேட்டதற்கு வீடு வீடாக சென்று குறைந்த விலையில் வாங்கி அதிக விலைக்கு அருகில் உள்ள கோழிப்பண்ணைகளுக்கு விற்பனை செய்வதாக தெரிவித்தனர். TATA ACE வாகனத்தில் மொத்தம் 30 மூட்டைகள் அரிசி காணப்பட்டது ஒவ்வொரு மூட்டையும் 35 கிலோ எடை கொண்டவை ஆகும். மொத்தம் 1050 கிலோ அரிசி. அதனை எதிரிகள் எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இல்லாமல் வைத்திருந்தனர். அந்த இடத்தில் அந்த சமயத்தில் பொதுமக்கள் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில் மடிக்கணினி போலீசாரை வரவழைத்து அவர் மூலம் சம்பவ இடத்தில் கைப்பற்றுதல் மகஜர் ஆய்வாளர் தயார் செய்தார். எதிரிகள் இருவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் எனது மற்றும் கிரேடு–1 பாலமுருகன் ஆகியோர் முன்னிலையில் பெறப்பட்டது. மேற்படி சம்பவத்தின் எதிரிகள் மற்றும் அரிசி வாகனம் ஆகியவற்றை எங்களது காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து குற்ற எண் 64/2023 ஆக முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்தோம். மேற்படி அரிசியை சித்தர் காட்டில் உள்ள நுகர் பொருள் வாணிப கழகத்தில் ஒப்படைத்து ரசீது பெறப்பட்டது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவ துகையொப்பங்கள் என்னுடையது தான். **அந்த கையொப்பங்கள் மட்டும் முறையே அ.சா.ஆ. 1, 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

ரோந்து பணிக்காக சென்றதாக குறிப்பிட்டுள்ளீர்கள் எந்த வாகனத்தில் எங்கு எங்கு சென்று வந்தீர்கள் என்றால் இரண்டு இரு சக்கர வாகனத்தில் மூன்று பேர் முதலில் மயிலாடுதுறை நகரப்பகுதியில் ரோந்து சென்று கொண்டிருந்தோம். ரகசிய தகவலின் அடிப்படையில் பின்னர் பூம்புகார் சாலையில் உள்ள புஞ்சை என்ற இடத்திற்கு சென்றோம். மயிலாடுதுறை நகர பகுதியில் கவுந்து பணியில் இருந்த போது சுமார் 5 மணி இருக்கும். புஞ்சை பகுதி மயிலாடுதுறையில் இருந்து சுமார் 12 கிலோமீட்டர் இருக்குமா என்றால் சுமார் 20 கிலோ மீட்டர் இருக்கும். மடிக்கணினி காவலரின் பெயர் எனக்கு தெரியாது ஆய்வாளருக்கு தான் தெரியும். மடிகணினி காவலர் 19.15 மணி அளவில் வந்தார். அவர் என்னென்ன ஆவணங்கள் தயார் செய்தார் என்று எனக்கு தெரியாது என்றால் நான் எதிரியின் பாதுகாப்பு பணியில் இருந்தேன். அதனால் கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்து மட்டுமே தெரியும். கைது குறிப்பாணையில் சாட்சியாக நான் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாக கைது குறிப்பாணை தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்னர் தான் கைது குறிப்பாணை தயார் செய்யப்பட்டது. சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரத்தில் பெட்ரோல் பங்க் திறந்து தான் இருந்தது என்றால் சரிதான்.அங்கு ஊழியர்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். சாட்சி தானாக பெட்ரோல் பங்கில் ஊழியர்கள் சாட்சியாக இருக்க முன் வரவில்லை என்று தெரிவிக்கிறார். சாட்சியாக இருக்க அவர்களை யார் அழைத்தது என்றால் ஆய்வாளர் அழைத்தார். மேற்படி பங்கில் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் சரிதான். TATA ACE வாகனம் பங்கிற்குள் வைத்து கைப்பற்றப்பட்டது என்றால் சரியல்ல வெளியில் வைத்து கைப்பற்றப்பட்டது. ஆனால் வரைபடத்தில் பங்கிற்குள் TATA ACE வாகனம் இருப்பதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன நாள் நேரத்தில் வழக்கு சொத்துகள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றாலும், எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. பெட்ரோல் பங்கின் சிசிடிவி கேமரா பதிவை தாக்கல் செய்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்பதால் தான் ஆய்வாளர் அதை கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆய்வாளர் பதிவு செய்த உண்மைக்கு புறம்பான முதல் தகவல் அறிக்கையை அனுசரித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறது என்றால் சரியல்ல. பொய் வழக்கு என்பதால் தான் தனிநபர்கள் சாட்சியாக வழக்கில் விசாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் பக்கத்து ஊர்காரர்கள் என்பதால் சாட்சிகளாக இருக்க யாரும் முன் வரவில்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித

சம்பந்தமும் இல்லை என்றாலும் புள்ளி விவரத்திற்காக எதிரிகள் மீது போடப்பட்ட பொய் வழக்கு என்றாலும் சரி அல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

7.7.25

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை